2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

வனச்சரக அலுவலகம்

***838—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் வனச் சரக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1981 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் சுவீடன் நாட்டு உதவியுடன் சமூகக் காடுகள் திட்டம், வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின்மூலம் வளம் குன்றிய மலைகள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் தோட்டங்கள் வளர்ப்பது மட்டுமின்றி, கண்மாய் பகுதிகளில் கருவேல மரங்கள் நடவு செய்வது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த காலகட்டத்தில் ஏற்பட்ட பணிச்சுமை காரணமாக கூடுதலாக ஒரத்தநாடு சமூக வனச் சரகம் ஏற்படுத்தப்பட்டது. சமூகக் காடுகள் திட்டப் பணிகள் ஒரத்தநாடு பகுதியில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு நிறைவு பெற்றுள்ளதால், அந்த வனச் சரக திட்டப் பணிகள் தஞ்சாவூர் வனச் சரகத்துடன் இணைக்கப்பட்டு, தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் மற்றும் பட்டுக்கோட்டையில் செயல்பட்டு வரும் வனச் சரகங்களுக்கிடைப்பட்ட தூரம் 48 கி.மீ. மட்டுமே உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரத்தநாடு, இந்த இரண்டு ஊர்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி,

2016 ஆகஸ்ட் 29]

ஒரத்தநாட்டில் காப்புக் காடுகளோ, மலைகளோ, வளம் குன்றிய வனப் பகுதிகளோ ஏதும் இல்லாத காரணத்தினால், தனியாக வனச் சரக அலுவலகம் செயல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

109—

மேம்பாலம்

***2254—திரு. ஆர். காந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா நகராட்சியில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி வரை மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா நகராட்சி, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி வரையுள்ள சாலையில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.